நடைபெற்றுக் கொண்டு நம்முடைய மாநிலத்தில் வேலை ஸ்தம்பித்து இருப்பது மாற்றாந்தாய் மனப்பான்மைபோல் இருக்கிறது. எனவே, நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி விரைவிலே நிறுவிட ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் உறுப்பினர் அவர்களுடைய உணர்ச்சியை நான் மதிக்கிறேன். வேறு வகையிலும் பேசப்படுகிறது. ஆந்திரம், மைசூர், தமிழ்நாடு ஆகிய மூன்று இடத்திலும் தொடங்கினார்கள். இருந்தாலும் சேலத்திலேதான் அதிக விரைவிலே வேலைகள் நடைபெறுகின்றன என்றும் பரவலாகப் பேசப்படுகிறது. அது உண்மையல்ல. 1964-ம் ஆண்டிலே காங்கிரஸ் ஆட்சி நடந்தபொழுது அப்பொழுது தொழில் துறை அமைச்சராக இருந்தவர் இதிலே தனித்த அக்கறை எடுத்துக் கொண்டு பல ஆராய்ச்சிகள் நடத்தி உடனடியாக இதை நிறைவேற்றுவதற்கான செய்திகளை எல்லாம் சேகரித்து வைத்திருந்தார்கள். அதனால் கர்நாடகம், ஆந்திரம் மாநிலங்களின் உருக்காலைப் பணிகளைவிட சேலம் உருக்காலைப் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது என்று மத்திய அரசிடத்திலே வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

சிறிய கார் உற்பத்தி

* 416 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறிய கார் உற்பத்தி செய்வதற்கான அனுமதி யாருக்கேனும் வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாற்றியமைக்கப் பெற்ற வடிவமுடைய பயணிகள் கார்களை ஆண்டு ஒன்றுக்கு 10,000 வீதம் உற்பத்தி செய்ய புதிய தொழில் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு சேலத்திலுள்ள அலேடு என்ஜினியரிங் கார்ப்பரேஷனுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1972 மார்ச் 10]

THIRU K. M. SUBRAMANIAM : Since priority should be for cheaper classes of vehicles, is this Government thinking of starting another Scooter factory in Tamil Nadu?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸ்கூட்டர் 20,000 எண் உற்பத்தி செய்வதற்குத் தனி நபர் ஒருவருக்கு அனுமதி வழங்கப் பட்டது. ஆனால் அந்த அனுமதியை நிறைவேற்ற முடியாது என்று அவர்கள் கைவிட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு அவருக்குக் கொடுக்கப்பட்ட அந்த அனுமதியை இந்த அரசாங்கம் தொடங்குவதற்கு அனுமதிக்கவேண்டுமென்று இந்த அரசாங் கத்தின் சார்பிலே கேட்டிருக்கிறோம்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, தொடங்கப்படுகிற தொழில்கள் அத்தனையும் சென்னையிலும், சென்னை நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில்தான் தொடங்கப் படுகின்றன. அதனால் சென்னை நகரிலே ஜனப் பெருக்கம் ஏற்பட்டு ஜன நெரிசல் உண்டாகியிருப்பதன் காரணமாக வசதிக் குறைவுகள் ஏற்படுகின்றன. பியட் கார் கம்பெனி ஒன்று தொடங்கப் போவதாக அறிகிறேன், அதை செங்கற்பட்டு மாவட் டத்தின் மேற்குப் பகுதியிலே பின்தங்கியப் பகுதியாக உள்ள காஞ்சிபுரத்திலே தொடங்குவதற்கு எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்பட்ட பகுதிகள் இருக்கின்றன. அவர்கள் மாவட்டத்திலேயே இன்னொரு பகுதிக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள பிற்பட்ட பகுதிகளுக்கு பரவலாக முக்கியத்துவம் கொடுத்துத்தான் பல தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அதற்காகத்தான் தொழிலதிபர்களுக்குப் பல சலுகைகள், கன்செஷன்ஸ் அளிக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஏற்கெனவே கார்களை உற்பத்தி செய்யும் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையின் தகராறே இன்னும் தீர்ந்தபாடில்லை. போட்டிக்கு இப்பொழுது சேலத்திலே கார் தொழிற்சாலை ஆரம்பித்தால் அதனால் சென்னையிலே உள்ள தொழிற்சாலை பாதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒன்றும் போதிய அளவுக்கு இருக்கும் தொழிற்சாலையல்ல. ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலைக்குக் கூட ஒரு யோசனை சொல்லப்பட்டது. குறைந்த அளவு உற்பத்தியை வைத்துக் கொண்டிருந்தால் இந்திய அளவிலே வயபிள் ஆக இருக்க முடியாது, அந்தத் தொழிற்சாலை இன்னும் நல்ல முறையிலே அதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று யோசனை சொல்லப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் தொழிற்சாலை கான்சன்ட்ரேஷன் ஆப் பீபிள் உள்ள பகுதிகளிலே ஆரம்பிக்காமல் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலே குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட பகுதிகளாக இருக்கிற உசிலம்பட்டி, முதுகுளத்தூர் பகுதிகளிலே ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதியைப்பற்றி இங்கே கேள்வி கேட்டதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். எல்லா மாவட்டங்களிலும் ஒரு சில பிற்பட்ட பகுதிகள் இருக்கின்றன. பின்தங்கிய பகுதிகளில் தொழில் ஆரம்பிப்பதிலேதான் நாம் அதிகமாக உற்சாகம் காட்டி வருகிறோம்.

சூலூரிலுள்ள ராமச்சந்திரன் குளம்

* 417 **வினா—திரு. கே. என் குமாரசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

கோவை மாவட்டம், பல்லடம் தாலுக்கா, சூலூரில் உள்ள ராமச்சந்திரன் குளம் ஒன்றை நூறு எக்காரவில் அமைக்கத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.